நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி
முன்னிலை : திருமதி. V. பாரத தேவி, எம்.எல்.,
நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.
2026 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 02–ம் நாள் வியாழக்கிழமை
குற்றவியல் பல்வகை மனு எண் : 1747/2026
CNR No.TNTH020028012026

முருகன் (எ) கரையாம்பட்டியன் (50/2026),
த/பெ. லோகன்துரை ....மனுதாரர்/எதிரி

/எதிர்/

அரசுக்காக – சார்பு ஆய்வாளர் அவர்கள்,
தேனி காவல்நிலையம்,
குற்ற எண்.190/2026,
சட்டப்பிரிவு 305 (a) BNS ....எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர்

இம்மனு இன்றைய தினம் விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.மனோஜ்,B.A.,L.L.M., அவர்கள் ஆஜராகியும், அரசு தரப்பில் குற்றத்துறை வழக்கறிஞர் நிலை–II அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலித்தும் இந்நீதிமன்றம் வழங்கும்...

## உத்தரவு

மனுதாரர் இம்மனுவை பிரிவு 480 BNSS–ன் கீழ் தேனி காவல் நிலைய குற்ற எண்.190/2026, சட்டப்பிரிவு 305 (a) BNS –வழக்கிலிருந்து பிணைகோரி தாக்கல் செய்துள்ளார்.

எதிர்மனுதாரர் தரப்பிற்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டு பதில் பெறப்பட்டது. அதில், இவ்வழக்கு குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்து நீதிமன்ற விசாரணையில் இருந்து வருகிறதாலும், எதிரி மீது தேனி மற்றும் பிற மாவட்டத்தில் பல காவல் நிலையங்களில் திருட்டு குற்றங்களில் ஈடுபட்டு வழக்குகள் நீதிமன்ற விசாரணையில் இருந்து வருகிறதாலும், எதிரிக்கு ஜாமீன் வழங்கினால் மீண்டும் இதுபோன்ற திருட்டு குற்ற வழக்குகளில் ஈடுபடக்கூடும் என்பதாலும், எதிரி நீதிமன்றத்தில் ஆஜராகாமல் தலைமறைவு ஆகக்கூடும் என்பதாலும், சாட்சிகளை கலைக்கக்கூடும் என்பதாலும், எதிரிக்கு ஜாமீன் வழங்க மிகக்கடுமையாக ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருதரப்பும் கேட்கப்பட்டது. மனுதார்/எதிரி சட்டப்பிரிவு 305 (a) BNS–ன் கீழ் குற்றம் சுமத்தப்பட்டுள்ளார். எதிரி கடந்த 10.03.2026–லிருந்து நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார் என்பதை அறிய முடிகிறது. எதிரி 110 நாட்களுக்கு மேலாக நீதிமன்ற காவலில் இருப்பதை கருத்தில் கொண்டும், இவ்வழக்கு விசாரணை நிலையில் இருந்து வருவதைக் கருத்தில் கொண்டும், இம்மனுவானது அனுமதித்து பின்வருமாறு கீழ்க்கண்ட நிபந்தனைகள் வழங்கி உத்தரவிடப்டுகிறது.

<u>நிபந்தனைகள்</u>

1) மனுதாரர்/எதிரி தனது சார்பாக இரு ஜாமீன்தாரர்களோடு தலா ரூ.10,000/–க்கு பிணைமுறி எழுதித் தரவேண்டும்.

2) மனுதாரர்/எதிரி எதிர்மனுதாரர் காவல் நிலையத்தில் தினமும் காலை 10.00 மணிக்கு நேரில் ஆஜராகி 30 நாட்களுக்கு தொடர்ந்து கையெழுத்திட வேண்டும்.

3) மனுதாரர்/எதிரியும், ஜாமீன்தார்களும் தாங்கள் தொடர்ச்சியாக பயன்படுத்திவரும் கைபேசி எண்ணை குறிப்பிட வேண்டும்.

4)மனுதாரர்/எதிரி சாட்சிகளையோ, சாட்சியங்களையோ கலைக்கக்கூடாது எனவும்,

5)வழக்கு விசாரணை முடியும் வரை வெளிமாநிலம்/வெளிநாட்டுக்கு செல்லக்கூடாது. மனுதாரர்/எதிரியின் பாஸ்போர்ட்டினை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய வேண்டும்.

6) பிணைக்காலத்தில் மனுதாரர்/எதிரி இதுபோன்ற எந்த குற்றச்செயலிலும் ஈடுப்படக்கூடாது எனவும், வழக்கு விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு அளிக்கவேண்டும் எனவும், அழைப்பாணையில் பேரில் அழைக்கும்போது நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் எனவும் உத்தரவிடப்படுகிறது.

BHARATHA DEVI

Digitally signed by BHARATHA DEVI
Date: 2026.07.02 19:32:44 +0530

நீதித்துறை நடுவர்,

தேனி.